**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**

**C.C. No. 622/2022.**

**வழக்கு சாட்சி – அ.சா.2 (பட்டியல் சாட்சி – 2).**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. ராஜேஸ்வரி | ஜாதி | |
| தந்தை பெயர் | பக்கிரிசாமி | தொழில் | ஆசிரியர் (பணி ஓய்வு) |
| கிராமம் | ஆண்டிபட்டி. | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 70/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.09.2026.

**(1–வது எதிரி ஆஜர். 2–வது எதிரி ஆஜரில்லை. அவருக்காக பிரிவு 355 B.N.S.S. –ன் கீழ் மனுத் தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**<u>அரசுத் தரப்பு முதல் விசாரணை:–</u>**

(1) நான் தற்போது, ஆண்டிபட்டியில் குடியிருந்துகொண்டு, ஆசிரியராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். அ.சா.1 எனது நண்பர் ஆவார். ஆஜர் எதிரியைப் பார்த்திருக்கிறேன். நானும், அ.சா.1 பாரிஜாதமும் மற்றும் எங்களுடன் சேர்ந்த நபர்களும் அடிக்கடி ஆன்மீக சுற்றுப் பயணம் செல்வோம். கடந்த 2022 ஆம் வருடம் அ.சா.1–க்கு அவரது உறவினர் ஆன்மீக சுற்றுப் பயணம் சம்பந்தமாக வாட்ஸ்– அப் மூலம் செய்தி அனுப்பியிருந்தார். அந்த செய்தில் கேதார்நாத் அழைத்துச் செல்வதாக இருந்தது. மேற்படி செய்தியில் வெங்கட்ராமன் என்ற நபரை தொடர்பு கொள்ளுமாறு குறுஞ்செய்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அவரை தொடர்பு கொண்டு, ஆன்மீக சுற்றுப் பயணம் சம்பந்தமாக கேட்டபோது, வழக்கமாக ஆன்மீக சுற்றுப் பயணம் அழைத்துச் செல்வதாகக் கூறினார்.

(2) எங்களுக்கு எந்த சந்தேகமும் ஏற்படாதவாறு அவர் பேசினார். மேற்படி செய்தியில் ஆன்மீக சுற்றுப் பயணம் அழைத்துச் செல்வதற்கு குறிப்பிட்ட அளவு பணம் செலுத்தவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. குறுஞ்செய்தில் இருந்தபடி வெங்கட்ராமன் என்ற நபருக்கு பல தவணைகளில் மொத்தம் ரூ.4,36,800/– ஐ சென்னை KVB வங்கிக்கு அனுப்பிவைத்தோம். அதன்பின்னர்,

சென்னைக்குச் சென்று மேற்படி நபர் குறித்து விசாரித்தபோது, அவர் ஏமாற்றும் நபர் எனத் தெரிந்துகொண்டோம். அதன்பின்னர், சைபர் கிரையம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள சாட்சிக் கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனு ஏற்கனவே அ.சா.ஆ–1 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

(எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சியை, குறுக்கு விசாரணை செய்யப் போதிய வாய்ப்பு வழங்கப்பட்டும், சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞரால் காலஅவகாசம் கோரப்பட்டது. எனவே, குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது).

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.09.03 14:24:48 +0530

**நீதித்துறை நடுவர்,**
**தேனி.**